# செங்கல்பட்டு மாவட்டம்
## ஒரு மதிப்பெண் திருப்புதல் பயிற்சி – பிப்ரவரி 2023
## தமிழ்

**வகுப்பு – 12** **மதிப்பெண் :100**
**நேரம்: 1.30 மணி**

1. பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தவள்
(அ) கோப்பெருந்தேவி (ஆ) வெண்மாள் (இ) தமிழன்னை (ஈ) ஔவையார்
2. உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே? என்ற விதிக்குப் பொருத்தமான சொல்லைக் கண்டறிக.
(அ) உன்னையல்லால (ஆ) வானமெல்லாம் (இ) செந்தமிழே (ஈ) செம்பரிதி
3. செய்ளை ஓர் உள்ளமைப்பாகக் கூறும் நூல்
(அ) நன்னூல் (ஆ) தொல்காப்பியம் (இ) யாப்பருங்கலக்காரிகை (ஈ) தண்டியலங்காரம்
4. காளைகளில் பல இனங்களைக் காட்டும் நூல்
(அ) தொல்காப்பியம் (ஆ) முல்லைக்கலி (இ) புறநானூறு (ஈ) பதிற்றுப்பத்து
5. பாடலின் தளத்தைப் பாத்திகட்டி வரப்புயர்த்தும் பணியைச் செய்வது
(அ) தொடரியல் வடிவம் (ஆ) ஒலிக்கோலம் (இ) சொற்றொடர் நிலை (ஈ) சொற்புலம்
6. ……இழுமெனும் மொழியால் விழுமியது பயக்கும் வகையின் இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன.
(அ) தமிழில் (ஆ) ஆங்கிலத்தில் (இ) தெலுங்கில் (ஈ) வடமொழியில்
7. மலரும் மணமும் போல கவிதையுடன் இரண்டறக் கலந்திருப்பது
(அ) தமிழர்களின் அழகுணர்வு (ஆ) தலைவன் தலைவியின் அன்புணர்வு
(இ) வள்ளலின் வள்ளன்மையுணர்வு (ஈ) பக்தர்களின் தெய்வ உணர்வு
8. அறியப்பட்ட வரலாற்றுக் காலத்தின் தொடக்கமாகத் தோற்றம் தருவது
(அ) புராணம் (ஆ) சங்க இலக்கியம் (இ) கல்வெட்டு (ஈ) நாணயம்
9. அழகு என்பது ……….. செய்தி.
(அ) மனிதரின் (ஆ) பேரண்டத்தின் (இ) காதலரின் (ஈ) கடவுளரின்
10. இலக்கியத்தின் ………. பற்றித் தமிழ் இலக்கிய மரபில் அழுத்தமான கருத்து உண்டு.
(அ) நயம் (ஆ) பயன் (இ) நிலை (ஈ) ஈடுபாடு
11. அகன் ஐந்திணைகளைப் பேசுவது
(அ) நன்னூல் (ஆ) தண்டியலங்காரம் (இ) தொல்காப்பியம் (ஈ) புறப்பொருள் வெண்பாமாலை
12. அந்நில மருங்கின் அறமுதலாகிய மும்முதற் பொருட்கும் உரிய என்பஎன்று பாவகைகளோடு அறவியல் கருத்துகளை இணைத்துச்சொல்வது
(அ) சங்க இலக்கியம் (ஆ) பரிபாடல் (இ) தொல்காப்பியம் (ஈ) அகத்தியம்
13. கவிதையின் …………….. நடை
(அ) இயங்காற்றல்தான் (ஆ) அழகுதான் (இ) பார்வைதான் (ஈ) இயல்புதான்
14. நடைபெற்றியலும் என்பது தொல்காப்பியத்தின ………….. வரும் சொற்றொடர்.
(அ) கிளவியாக்கத்தில் (ஆ) மொழியாக்கத்தில்
(இ) எழுத்து அதிகாரத்தில் (ஈ) இவற்றில் எதுவுமில்லை
15. கடந்தடுதானை மூவிருங்கூடி என்று தொடங்கும் பாடலடிகள் இடம்பெற்றுள்ள நூல்
(அ) அகநானூறு (ஆ) புறநானூறு (இ) கலித்தொகை (ஈ) பரிபாடல்
16. நுந்தை தந்தைக்கு இவன்தந்தை தந்தை? என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல்
(அ) புறநானூறு (ஆ) நற்றிணை (இ) அகநானூறு (ஈ) கலித்தொகை
17. கிடை என்னும் குறுநாவலில் ஆடுகளின் அடையாளங்களைப் பல பெயர்களைச் சொல்லி அழைப்பவர்
(அ) இந்திரா பார்த்தசாரதி (ஆ) கி. ராஜநாராயணன் (இ) ஜெயகாந்தன் (ஈ) ஜெயமோகன்
18. தொகைநிலை, தொகைமொழி பற்றிப் பேசும் தொல்காப்பியத்தின் இயல்
(அ) எச்சவியல் (ஆ) இடையியல் (இ) உவமையியல் (ஈ) எழுத்தியல
19. இடுக வொன்றோ, சுடுக வொன்றோ, படுவழிப் படுக, இப்புகழ் வெய்யோன் தலையே? என்ற புறநானூறு அடிகளில் குறிப்பிடப்படும் மன்னர்
(அ) அறிவுடைநம்பி (ஆ) நம்பி நெடுஞ்செழியன் (இ) செங்குட்டுவன் (ஈ) கிள்ளிவளவன்
20. தமிழ் அழகியலைக் கட்டமைப்பதற்குச் ………… முதன்மை ஆதாரம்.
(அ) சங்க இலக்கியமே (ஆ) சங்கம் மருவிய இலக்கியமே (இ) நீதி இலக்கியமே (ஈ) காப்பியமே
21. ……….. கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களில் தி. சு. நடராசன் குறிப்பிடத்தக்கவர்.
(அ) திரைக் (ஆ) திறனாய்வுக் (இ) மொழிபெயர்ப்புக் (ஈ) பேச்சுக்
22. கீழ்க்காண்பவற்றுள் வினையாலணையும் பெயர் எது.
(அ) உயர்ந்தோர் (ஆ) வந்தான் (இ) நடப்பான் (ஈ) உயர்ந்து
23. தமிழ் தோன்றிய மலை
(அ) குடகு (ஆ) பொதிகை (இ) இமயமலை (ஈ) விந்தியமலை
24. காவியதர்சம் என்பது
(அ) வடமொழி இலக்கணநூல் (ஆ) புராணநூல் (இ) வரலாற்று நூல் (ஈ) மலையாள இலக்கிய நூல்

25. பாரதி நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதிய இடம், நாள்
(அ) புதுச்சேரி, 19 ஜூலை 1915 (ஆ) நெல்லை, 14 ஜூலை 1914
(இ) கடலூர், 18 ஆகஸ்ட் 1914 (ஈ) காரைக்கால், 19 ஜூலை 1915
26. பாரதியின் கடைசிக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டது,
(அ) எட்டயபுரம் அரசருக்கு (ஆ) நெல்லையப்பருக்கு
(இ) குத்திகேசவருக்கு (ஈ) சீனி. விசுவநாதனுக்கு
27. ஒக்கி என்பதன் தமிழ்ச்சொல்
(அ) வாயு (ஆ) காற்று (இ) கண் (ஈ) வாய்
28. ஆனந்த் வேளாண் பல்கலைக்கழகம் எங்குள்ளது.
(அ) டெல்லி (ஆ) குஜராத் (இ) மும்பை (ஈ) கொல்கத்தா
29. உலகச் சுற்றுச்சூழல் நாள்
(அ) ஜூன் 5 (ஆ) ஜூலை 5 (இ) ஏப்ரல் 14 (ஈ) மே 5
30. பகலும் இரவும் சந்திப்பது
(அ) இரவு (ஆ) அந்தி (இ) வைகறை (ஈ) யாமம்
31. அய்யப்ப மாதவனின் “இன்று” என்பது
(அ) கவிதைத் தொகுப்பு (ஆ) கவிதைக் குறும்படம் (இ) ஆவணப்படம் (ஈ) புதினம்
32. நக்கீரரின் தந்தை
(அ) மதுரைக்கணக்காயனார் (ஆ) மாங்குடிமருதனார்
(இ) வெள்ளைக்கடிநாகனார் (ஈ) இவர்களில் எவருமிலர்
33. நெடுநல்வாடை ........... அடிகளைக் கொண்டது.
(அ) 144 (ஆ) 150 (இ) 188 (ஈ) 196
34. ஆயர் ............. மாலையைத் தலையில் சூடியிருந்தனர்.
(அ) அத்தி (ஆ) முல்லை (இ) காந்தள் (ஈ) குறிஞ்சி
35. உத்தம சோழன் அவர்களின் இயற்பெயர்
(அ) செல்வன் (ஆ) செயராஜ் (இ) செல்வராஜ் (ஈ) செல்லத்துரை
36. தொல்காப்பியம் குறிப்பிடும் வாழிடங்கள்
(அ) இல், மனை (ஆ) மனை, குடில் (இ) இல், குரம்பை (ஈ) இவற்றில் எதுவுமில்லை
37. இன்றைய தொழிற்சமூகத்தில் பெரும்பான்மையாகக் காணப்படும் குடும்பம்
(அ) தனிக்குடும்ப வகை (ஆ) சமூக குடும்ப வகை (இ) கூட்டுக்குடும்ப வகை (ஈ) விரிந்த குடும்ப வகை
38. தாகங்கொண்ட மீனொன்று என்ற தலைப்பில் தமிழில் மொழிப்பெயர்த்தவர்
(அ) என்.சத்தியமூர்த்தி (ஆ) என்.ஆர்.சத்திமூர்த்தி (இ) எஸ்.சத்திமூர்த்தி (ஈ) எம்.சத்தியமூர்த்தி
39. தமிழர் நற்பண்பின் உயர்ச்சியாக இருப்பது ............ ஆகும்.
(அ) புறநானூறு (ஆ) திருக்குறள் (இ) கம்பராமாயணம் (ஈ) தொல்காப்பியம்
40. வீடணன் அடைக்கலமாகும் படலம் எந்தக் காண்டத்தில் உள்ளது
(அ) ஆரண்ய காண்டம் (ஆ) கிட்கிந்தா காண்டம் (இ) கிட்கிந்தா காண்டம் (ஈ) யுத்த காண்டம்
41. மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகன்
(அ) சுகரீவன் (ஆ) குகன் (இ) வீடணன் (ஈ) அனுமன்
42. கிரயம் என்ற சொல்லின் பொருள்
(அ) ஒப்பந்தம் (ஆ) வாக்குறுதி (இ) விலை (ஈ) வாடகை
43. திருக்குறளை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர்
(அ) வீரமாமுனிவர் (ஆ) ஜி.யு.போப் (இ) கால்டுவெல் (ஈ) சார்லஸ் வில்கினிஸ்
44. ஏட்டுச்சுவடியிலிருந்து திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு
(அ) 1912 (ஆ) 1712 (இ) 1612 (ஈ) 1812
45. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு எனப் பாடியவர்
(அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன் (இ) வெ. ராமலிங்கனார் (ஈ) இராமலிங்க அடிகள்
46. திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எந்த நூற்றாண்டில் அதிகம் இருந்தன
(அ) 12ஆம் (ஆ) 18ஆம் (இ) 19ஆம் (ஈ) 17 ஆம்
47. மன்றத்திற்கு வழங்கும் இன்னொரு பெயர்
(அ) சபை (ஆ) சங்கம் (இ) கோட்டை (ஈ) அம்பலம்
48. நெடுங்கணக்கு என்பது
(அ) நீண்ட கணக்கு (ஆ) பெருக்கல் கணக்கு (இ) ஓலைச் சுவடி (ஈ) அரிச்சுவடி
49. சட்டாம்பிள்ளை என்பவர் யார்.
(அ) ஊரில் பெரியவர் (ஆ) சண்டித்தனம் செய்பவர்
(இ) தலைமை வகிக்கும் மாணவர் (ஈ) பிடிவாதம் பிடிக்கும் மாணவர்
50. தமிழ்த்தாத்தா என்னும் சிறப்புக்குரியவர்
(அ) உ.வே.சா. (ஆ) ம.பொ.சி. (இ) தெ.பொ.மீ (ஈ) மு.வ.
51. சுரதா என்பதன் விரிவாக்கம்
(அ) சுப்புரத்தினதாசன் (ஆ) சுதாரகுநாததாசன் (இ) சுப்பிரமணியரத்தினதாசன் (ஈ) இவற்றில் இல்லை
52. சி. மணி பேராசிரியராகப் பணியாற்றிய துறை

(அ) தமிழ் (ஆ) ஆங்கிலம் (இ) கணிதம் (ஈ) இயற்பியல்

53. ஔவையார் அகநானூற்றில் பாடியுள்ள பாடல்கள்
(அ) 5 (ஆ) 15 (இ) 4 (ஈ) 7

54. பரிசில் துறை என்பது (அ) பரிசு வேண்டி வாயிலில் நிற்பது
(ஆ) மன்னன் பரிசளித்துப் புலவரைப் பாராட்டுவது
(இ) பரிசு பெற்ற புலவன் மகிழ்ச்சியாக இல்லறம் திரும்புவது (ஈ) இவற்றில் எதுவுமில்லை

55. உலகிலேயே அதிக சாலைப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இரண்டாவது பெரிய நாடு
(அ) இந்தியா (ஆ) சீனா (இ) பாகிஸ்தான் (ஈ) அமெரிக்கா

56. முதல் பன்னாட்டுச் சாலை அமைப்பு மாநாடு நடைபெற்ற இடம் ஆண்டு
(அ) பாரிஸ், 1909 (ஆ) ரியோடி ஜெனிரொ, 1908 (இ) ஹாமில்டன், 1907 (ஈ) டர்பன், 1915

57. வெண்பா யாப்பு செல்வாக்குப் பெற்ற காலம்
(அ) சங்ககாலம் (ஆ) சங்கம் மருவிய காலம் (இ) காப்பிய காலம் (ஈ) ஐரோப்பியர் காலம்

58. வெண்டளை ............ வகைப்படும்.
(அ) இரண்டு (ஆ) மூன்று (இ) நான்கு (ஈ) ஐந்து

59. ஆட்சிக்கு அடித்தளமாகவும் அதிகார மையமாகவும் விளங்கிய கடற்கரை நகரம்
(அ) மதராசப்பட்டினம் (ஆ) காவிரிபூம்பட்டினம் (இ) புதுச்சேரி (ஈ) கொற்கை

60. ஆசியாவின் இரண்டாவது மிகப்பெரிய நூலகம்
(அ) கன்னிமாரா (ஆ) திருவனந்தபுரம் (இ) சரசுவதிமகால் (ஈ)அண்ணாநூற்றாண்டு நூலகம்

61. ஆங்கிலேயரின் நிதி உதவியின்றி இந்தியர் ஒருவரால் உருவாக்கப்பட்ட கல்வி நிறுவனம்
(அ) இராணிமேரிக் கல்லூரி (ஆ) பச்சையப்பன் கல்லூரி
(இ) சென்னைக் கோட்டைக் கல்லூரி (ஈ) கிறித்துவக்கல்லூரி

62. சென்னை நகராட்சி உருவாக்கப்பட்ட ஆண்டு
(அ 1639 (ஆ) 1646 (இ) 1688 (ஈ) 1768

63. சென்னையில் வாழ்ந்து வடலூர் சென்று ஆன்மீக மையத்தை ஏற்படுத்தியவர்
(அ வள்ளலார் (ஆ) ஞானியரடிகள் (இ)கிருபானந்த அடிகள் (ஈ) இவர்களில் எவருமிலர்

64. மயிலாப்பூரில் இறைவனுக்குக் கொண்டாடப்படும் விழா
(அ) பங்குனி உத்திர விழா (ஆ) திருக்கார்த்திகை (இ) சித்திரா பௌர்ணமி (ஈ) தைப்பூச விழா

65. எயிற்பட்டினம் உள்ள ஓய்மாநாட்டை ஆட்சி செய்தவன்
(அ) அதியமான் (ஆ) நல்லியகோடன் (இ) பேகன் (ஈ) நளங்கிள்ளி

66. படப்பிடிப்புக் கருவியோடு திரையிடும் கருவியையும் சேர்த்து திரைப்படம் என்னும் விந்தையை உலகுக்கு அளித்தவர்கள்
(அ) லூமியர்சகோரார்கள் (ஆ) எடிசன்சகோதரர்கள் (இ) ஜார்ஜ்சகோதரர்கள் (ஈ) இவர்களில் எவருமிலர்

67. சார்லி சாப்ளினுக்கு வாழ்நாள் சாதனையாளர் என்னும் வகையில் .......... விருது வழங்கப்பட்டது.
(அ) கோல்டன் குளோப் (ஆ) ஆஸ்கார் (இ) பிரவு டுஆப் அமெரிக்கா (ஈ) கோல்டன் வேர்ல்டு

68. "இருப்பதற்கென்றுதான் வருகிறோம் இல்லாமல் போகிறோம்" என்று எழுதியவர்
(அ) நாகூர் ரூமி (ஆ) பாரதிதாசன் (இ) நகுலன் (ஈ) ஆத்மாநாம்

69. சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும் என்று கூறியவர்
(அ) திரு.வி.க (ஆ) பாரதி (இ) பாரதிதாசன் (ஈ) ம.பொ.சி.

70. இந்திரனின் மகன்
(அ) சனகன் (ஆ) சயந்தன் (இ) அபினந்தன் (ஈ) மாயன்

71. தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடு.
(அ) ஆறு (ஆ) ஏழு (இ) எட்டு (ஈ) ஒன்பது

72. ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர்
(அ) சிவஞான முனிவர் (ஆ) மயிலை நாதர் (இ) ஆறுமுக நாவலர் (ஈ) இளம்பூரணர்

73. பஞ்சகாப்பியம் என்னும் சொற்றொடர் பயன்படுத்தப்பட்ட நூல்
(அ) நன்னூல் (ஆ) தமிழ்விடுதூது (இ) பொருள்தொகை நிகண்டு (ஈ) திருத்தணிகை உலா

74. ஆட்டனத்தி ஆதிமந்தி என்னும் குறுங்காப்பியத்தை இயற்றியவர்
(அ) பாரதிதாசன் (ஆ) கண்ணதாசன் (இ) கவிமணி (ஈ) புலவர் குழந்தை

75. திண்ணியர் என்பதன் பொருள் தருக.
(அ) அறிவுடையார் (ஆ) மன உறுதியுடையவர் (இ) தீக்காய்வார் (ஈ) அறிவினார்

76. சீனத்தில் வழங்கும் யாங்சௌ கதை .......... பற்றியது.
(அ) இவ்வுலக வாழ்வை (ஆ) நேர மேலாண்மையை (இ) கொல்லாமையை (ஈ) சொர்க்கத்தை

77. இலக்கியத்தில் மேலாண்மை என்னும் நூலை எழுதியவர்
(அ) சகாயம் (ஆ) வெ. இறையன்பு (இ) இந்திரா பார்த்தசாரதி (ஈ) மேலாண்மை பொன்னுசாமி

78. கவிஞர் தமிழ்நதி புலம்பெயர்ந்து சென்றுள்ள நாடு
(அ) சிங்கப்பூர் (ஆ) மலேசியா (இ) கனடா (ஈ) ஆஸ்திரேலியா

79. உண்டு பிறந்து வளர்ந்த இடந்தனில் - இத்தொடரில் பெயரெச்சம்
(அ) உண்டு (ஆ) பிறந்து (இ) வளர்ந்த (ஈ) இடந்தனில்

80. தோட்டக் கூலிகளாகத் தமிழர்களை வெள்ளையர் சேர்க்குமிடங்கள்

**(அ)** இலங்கைத் தீவு, அந்தமான் தீவு **(ஆ)** மலேசியா, சிங்கப்பூர்
**(இ)** ஆஸ்திரேலியா, இங்கிலாந்து **(ஈ)** அமெரிக்கா, கனடா

81. பிசிர் என்பது
**(அ)** எஞ்சிய வாழ்க்கை **(ஆ)** பாண்டிய நாட்டில் இருந்த ஓர் ஊர்
**(இ)** சோழநாட்டில் **(ஈ)** இவற்றில் எதுவுமில்லை

82. ஆந்தையார் என்பது
**(அ)** இயற்பெயர் **(ஆ)** காரணப்பெயர் **(இ)** பாண்டிய நாடு **(ஈ)** குலப்பெயர்

83. அறிவுடை நம்பி ஆண்ட நாடு
**(அ)** சேரநாடு **(ஆ)** சோழநாடு **(இ)** பாண்டிய நாடு **(ஈ)** பல்லவ நாடு

84. சங்ககாலக் கல்வெட்டுகளும் என் நினைவுகளும் என்ற ஐராவதம் மகாதேவன் எழுதிய கட்டுரைவெளிவந்த இதழ்
**(அ)** எழுத்து **(ஆ)** கணையாழி **(இ)** கல்வெட்டு **(ஈ)** தென்றல்

85. கவிதையில் பழங்கதையைத் துணையாகக் கொண்டு ஒரு கருத்தை விளக்குவது
**(அ)** படிமம் **(ஆ)** தொன்மம் **(இ)** குறியீடு **(ஈ)** இவற்றில் எதுவுமில்லை

86. மயிலை சீனி. வேங்கடசாமியின் முதல் நூல்
**(அ)** கிறித்துவமும் தமிழும் **(ஆ)** பௌத்தமும் தமிழும் **(இ)** சமணமும் தமிழும் **(ஈ)** இவற்றில் இல்லை

87. நான் வெற்றுவெளியில் அலைந்து கொண்டிருக்கிறேன் எனது முகத்தைத் தேடியபடி என்று சுகந்திசுப்பிரமணியன் தேடுவதாகக் குறிப்பிடுவது.
**(அ)** தமது வீட்டு முகவரி **(ஆ)** தமது குடும்பத்தை **(இ)** தமது அடையாளத்தை **(ஈ)** தமது படைப்புகளை

88. இரட்சணிய யாத்திரிகம் என்பது
**(அ)** ஒரு பெரும் உருவகக் காப்பியம் **(ஆ)** சிற்றிலக்கியம் **(இ)** சிறு காப்பியம்**(ஈ)** காப்பியம்

89. இரட்சணிய யாத்திரிகத்தில் உள்ள பருவங்கள்
**(அ)** மூன்று **(ஆ)** நான்கு **(இ)** ஐந்து **(ஈ)** ஆறு

90. ஆவினன்குடி "பொதினி" என்றழைக்கப்பட்டு தற்போது ………… எனப்படுகிறது.
**(அ)** பழனி **(ஆ)** பிரான் மலை **(இ)** திருக்கோவிலூர் **(ஈ)** தர்மபுரி

91. சிறுபாணாற்றுப்படையை இயற்றியவர்
**(அ)** மாங்குடி மருதனார் **(ஆ)** நல்லூர் நத்தத்தனார் **(இ)** வெள்ளைக்குடி நாகனார் **(ஈ)** பூதஞ்சேந்தனார்

92. கோடை மழை என்னும் சிறுகதை வெளியான இதழ்
**(அ)** கோகுலம் **(ஆ)** அமுதசுரபி **(இ)** கணையாழி **(ஈ)** குங்குமம்

93. சாந்தா தத்தின் கதைகளில் வெளிப்படும் அடிப்படைப் பண்பு
**(அ)** பெண்ணியம் **(ஆ)** கல்வி **(இ)** மனிதநேயம் **(ஈ)** அரசியல்

94. சங்க இலக்கியத்தில், அகத்திணை மாந்தர்களின் உள்ளத்து உணர்வுகளைக் குறிப்பாக உணர்த்தும்குறியீடுகள்.
**(அ)** உவமை **(ஆ)** உவமேயம் **(இ)** உத்தி **(ஈ)** உள்ளுறை உவமை

95. மறைத்துச் சொல்லவும் மிகுத்துச் சொல்லவும் அழுத்திச் சொல்லவும் பயன்படும் இலக்கிய உத்தி எது.
**(அ)** குறியீடு **(ஆ)** படிமம் **(இ)** அங்கதம் **(ஈ)** தொன்மம்

96. வைகலும் இலக்கணக் குறிப்பு தருக
**(அ)** எண்ணுமை **(ஆ)** முற்றும்மை **(இ)** உம்மைத் தொகை **(ஈ)** உருவகம்

97. அணைத்தனன் - இச்சொல்லைப் பிரிக்கும் முறையைக் காண்க
**(அ)** அணைத்து +அனன் **(ஆ)** அனைத்த்+ உ+ அனன்
**(இ)** அணை+த்+த்+அன்+அன் **(ஈ)** அனைத் + த் + உ+ அனன்

98. உறுசுடர் - இலக்கணக் குறிப்பு தருக
**(அ)** பண்புத் தொகை **(ஆ)** வினைத் தொகை **(இ)** உரிச்சொற்றொடர் **(ஈ)** உவமைத்தொகை

99. உறுதுப்பு அஞ்சாது, உடல் சினம் செருக்கிச் சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை - இவ்வடிகளில் இடம் பெற்ற தொடை
**(அ)** அடி எதுகை, சீர்மோனை **(ஆ)** சீர்மோனை, அடிமோனை
**(இ)** அடிமோனை, அடி எதுகை **(ஈ)** சீர் இயைபு, அடி இயைபு

100. சொல்லின் இறுதியில் வராத மெய்யெழுத்து
**(அ)** ழகர மெய் **(ஆ)** நகர மெய் **(இ)** றகர மெய் **(ஈ)** ணகர மெய்

www.Padasalai.Net